LIBRARY
22 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மூன்றாம் வருட /முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு 2014/2015
(மே / ஜூன் 2016)

# TL 3122 இலக்கிய விமர்சனம் - ஓர் அறிமுகம்
# Introduction to Literary Criticism

நேரம்: 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் இரு வினாக்களுக்கும் விடை தருக.

---

01.

(அ) பின்வரும் 'சிறுகதை'யை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

<u>ரிக்ஷா</u>

'அப்பா, அப்பா! ரிஷ்கா! ரிஷ்கா!' என்று ரவி உள்ளே என்னிடம் ஓடி வந்தான். ரவிக்கு மூன்று வயது. வாசலில் ரிக்ஷா ஒன்று போய்க் கொண்டிருந்தது. வீட்டில் வேறு யாரும் இல்லை.

'ரிஷ்கா இல்லை, ரிக்ஷா'
ரவி அருகே வந்தான்.
'எங்கே சொல்லு, ரிக்ஷா'
ரிஷ்கா
'ரிஷ்கா இல்லை, ரிக்ஷா'
ரிஷ்கா
ரிக்ஷா
ரிஷ்கா
ரிக் - ஷா
ரிஷ்கா
ரிக்க்ஷா
ரிஷ்கா
அப்படியில்லை, இதோ பார், ரிக்
ரிக்
ஷா
ஷா
ரிக்ஷா
ரிஷ்கா
ஊஹூம், மறுபடியும் சொல்லு, ரிக்
ரிக்
ஷா
ஷா
ரிக்ஷா
ரிஷ்கா
சிறிது நேரம் மௌனம் நிலவியது.

பார் ரவி, என்னைப் பார்த்துச் சொல்லு, ரீ
ரீ
இக்
இக்
ஷா
ஷா
ரிக்ஷா
ரிஷ்கா
உலகம் க்ஷணகாலம் அசைவற்று இருந்தது.

ரவி
அப்பா
சரியாகச் சொல்லு, ரிக் ரிக் ரிக்
ரிக் ரிக் ரிக்
ரிக் ரிக் ரிக்
ரிக் ரிக் ரிக்
ஷா ஷா ஷா
ஷா ஷா ஷா
ஷா ஷா ஷா
ஷா ஷா ஷா
ரிக்ஷா, ரிக்ஷா
ரிஷ்கா, ரிஷ்கா
ரிக்ஷா, ரிக்ஷா
ரிஷ்கா, ரிஷ்கா

காய்கறி வாங்கப் போன மனைவி திரும்பி வந்தாள். வந்த பிறகுதான் அவள் குடையை மறந்துவிட்டு வந்தது தெரிந்தது.
'ஐயோ அவ்வளவு தூரம் மறுபடியும் போக வேண்டுமே' என்றாள்.
'ரிக்ஷாவில் போய்விட்டு வந்துவிடேன்' என்றேன்.
மனைவி என்னை ஏதோ மாதிரிப் பார்த்தாள்.
'என்ன?' என்றேன்.
'இப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்?'
'ரிக்ஷாவில் போய்விட்டு வா என்றேன்.'
'ஏதோ ரிஷ்கா என்கிற மாதிரி விழுந்தது' என்றாள்.

நான் ரவியைப் பார்த்தேன். ரவி விளையாடிக் கொண்டிருந்தான்.

(i) மேற்கூறிய சிறுகதைக்குக் கருப்பொருள் என்ன?

(ii) அது வெளிப்படையாகவே தெரிகிறதா? உள்ளார்ந்திருக்கிறதா? விளக்கம் தருக.

(iii) வாழ்க்கை பற்றிய பொதுவான கருத்துக்களை அது வலுப்படுத்துகிறதா? அல்லது ஏற்கனவே உள்ள கருத்துக்களைப் புதுமைப்படுத்துகிறதா?

(iv) மேற்கூறிய கதை எவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது?

(v) 'நான் ரவியைப் பார்த்தேன். ரவி விளையாடிக் கொண்டிருந்தான்.' என்ற இறுதிப் பகுதி இச் சிறுகதைக்கு அவசியமானதா? ஆம் அல்லது இல்லை எனில் அதற்கு விளக்கம் தருக.

(5 x 5 = 25 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா

அன்பினுக் காகவே வாழ்பவர் ஆர் - அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவர் ஆர்
இன்ப உரைகள் தருபவர் ஆர் - வீட்டை
இன்னகை யாலொளி செய்பவர் ஆர்"

(i) மேற்கூறிய கவிதை எழுப்பும் உணர்ச்சி எத்தகையது? விளக்குக.

(ii) மேற்கூறிய கவிதையில் எதுகை மோனைப் பயன்பாடு சிறப்பாக அமைந்துள்ளது எனக் கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமுடையது? சுருக்கமாக விளக்குக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

(இ)

(i) பின்வரும் கவிதையில் ஒலிநயம் பெறும் முக்கியத்தைப் பரிசீலிக்குக.

"சூலம் எழுந்தது :
அண்டம் அதிர்ந்தது
உலகெங்கும் கூடாரம்
ஊரெங்கும் விஷப்புகை
வானெங்கும் எ·கிறகு
தெருவெங்கும் பிணமலை
கேட்டதொரு வேறுகுரல்"

(ii) மேலுள்ள கவிதை மரபுக் கவிதையா? நவீன கவிதையா? ஆதாரம் காட்டி விளக்குக.

(2 x 7 ½ = 15 புள்ளிகள்)

02. தற்காலக் கவிதைகளில் அணிகள் பெற்றுள்ள இடம் குறித்து அலசுக. (20 புள்ளிகள்)

03. நாவலின் ஆக்கக் கூறுகள் பற்றித் தெளிவாக விளக்குக. (20 புள்ளிகள்)

04. நீர் வாசித்த சிறுகதைத் தொகுப்பு ஒன்று பற்றி விமர்சிக்குக. (20 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

(i) இலக்கியக் கோட்பாடு, இலக்கிய விமர்சனம் என்பவற்றுக்கிடையிலான ஊடாட்டம்.

(ii) ஆரம்ப கால இலக்கிய விமர்சனம் - சுருக்கமான அறிமுகம்

(iii) நவீன இலக்கிய விமர்சன முறைகளுள் யாதேனும் **ஒன்று** பற்றிய விளக்கம்.

(iv) புதுக்கவிதையில் படிமம்.

(v) திரைப்படப் பாடல்களில் கற்பனை.

(10 x 2 = 20 புள்ளிகள்)

***********************************************